யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | இந்துநாகரிகம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

- ❖ பகுதி I வினாத்தாள் 50 வினாக்களைக் கொண்டது.
- ❖ அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

01) "ஏகம் சத்........." சத்தியமான பொருள் ஒன்றே என்ற தத்துவக் கருத்தை முதன் முதலாகக் குறிப்பிடுவது
(1) இருக்குவேதம் (2) மகாபாரதம் (3) இலிங்கபுராணம்
(4) சாமவேதம் (5) இராமாயணம்

02) வேதங்களும் ஆகமங்களும் மெய்யானவை எனவும் இறைவன் நூல் எனவும் போற்றியவர்
(1) யாஸ்கர் (2) திருமூலர் (3) மாக்ஸ்மூலர்
(4) வசிட்டர் (5) சுவாமி விவேகானந்தர்

03) எல்லாச் சமயத்தவரும் சமயப் பொறையினை மேற்கொண்டு உடன்பிறப்புக்கள் என்ற உணர்வுடன் ஒன்றுபட வேண்டும் என்பதைக் கல்வெட்டின் மூலம் மக்களை வேண்டிய மௌரிய மன்னன்
(1) சந்திரகுப்தன் (2) பிந்துசாரன் (3) அசோகன்
(4) குணாளன் (5) மகேந்திரன்

04) வைணவ சமயத்தின் ஆகமங்கள்
(1) சிவாகமங்கள் (2) தந்திரங்கள் (3) குமாரதந்திரம்
(4) திரிபுர ரகசியம் (5) பஞ்சராத்திரம், வைகாசனம்

05) அருணகிரிநாதர் அருள் பெற்ற திருத்தலம்
(1) சிதம்பரம் (2) மதுரை (3) திருச்செந்தூர்
(4) திருவண்ணாமலை (5) கதிர்காமம்

06) ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படும் பேரிலக்கியம்
(1) பகவத்கீதை (2) இராமாயணம் (3) பிருகத்சம்கிதை
(4) மகாபாரதம் (5) மயமதம்

07) இதிகாசங்களுள் ஒன்றின் ஆசிரியர் ஆதிகவி எனப் போற்றப்பட்டார். அவரது பெயர்
(1) வசிட்டர் (2) வான்மீகி (3) வியாசர்
(4) பாதநாரயணர் (5) காளிதாசர்

08) தர்மசாஸ்திரங்களில் அரச நீதி பற்றிக் கூறப்படும் பகுதி
(1) ஆசாரகாண்டம் (2) வியவகார காண்டம் (3) பிராயச்சித்த காண்டம்
(4) ஞானகாண்டம் (5) கர்ம காண்டம்

09) இலங்கையில் பாடல் பெற்ற திருத்தலங்கள் இரண்டின் பெயர்கள் அடங்கிய தொகுதி
(1) நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம்
(2) பொன்னம்பல வாணேஸ்வரம், சந்திரசேகரேச்சரம்
(3) வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில், நகுலேஸ்வரம்
(4) திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம்
(5) வானவன் மாதேவீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்

10) பல்லவர் காலத்தில் தமிழகத்தில் வைதிகக் கல்வியைப் போதித்த கல்வி நிறுவனம்
(1) நைமிசாரண்யம் (2) அரண்மனை
(3) காஞ்சிகடிகைதானம் (4) திண்ணைப் பள்ளிக்கூடம்
(5) விநாயகர் மண்டபம்

11) ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தை நிறுவியவர்
(1) ஸ்ரீஇராமகிருஷ்ண அம்மையார் (2) சுவாமி சிற்பவானந்தர்
(3) சுவாமி விவேகானந்தர் (4) சுவாமி விபுலானந்தர்
(5) ஸ்ரீ சைதன்யர்

12) மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகிய ‘‘சிவஞான போதம்’’ என்ற நூலை இயற்றியவர்
(1) உமாபதி சிவாச்சாரியார் (2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) மனவாசகங்கடந்தார் (4) உய்யவந்ததேவர்
(5) மெய்கண்டதேவர்

13) திருமுறைகளைத் தொகுத்தவர்
(1) நம்பியாண்டார் நம்பி (2) நாதமுனிவர் (3) இராஜராஜசோழன்
(4) குலோத்துங்கசோழன் (5) மகேந்திரவர்மன்

14) தமிழகத்தில் உச்சிப்பிள்ளையார் என்ற சிறப்புடன் விளங்கும் விநாயகர் ஆலயம் அமைந்துள்ள இடம்
(1) திருநல்லூர் (2) திருவையாறு (3) திருச்சிராப்பள்ளி
(4) திருவாவடுதுறை (5) திருப்பரங்குன்றம்

15) அறத்துடன் வையத்துள் சிறப்புற வாழ்வதற்கு மக்களுக்கு வழிகாட்டும் நூல்களில் ஒன்று
(1) மயமதம் (2) திருக்குறள் (3) பிரம்மசூத்திரம்
(4) காமாண்டக நீதிசாரம் (5) பிருகத் சங்கிதை

16) காந்தாரக் கலை சிறப்புற்று விளங்கிய காலம்
(1) மௌரியர் காலம் (2) குப்தர் காலம் (3) குஷாணர் காலம்
(4) சாளுக்கியர் காலம் (5) சோழர் காலம்

17) தன்னை ‘‘ஆகமப் பிரியன்’’ என்று கூறிய பல்லவ மன்னன்
(1) சிம்மவிஷ்ணு (2) மகேந்திரவர்மன் (3) நரசிம்மவர்மன்
(4) இராசசிம்மன் (5) நந்திவர்மன்

18) தேவி வழிபாடும் தேவிக்குச் சிவனாருடன் கோயில் எடுப்பதும் முதன்மை பெறத் தொடங்கிய காலம்
(1) சங்க காலம் (2) மௌரியர் காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழர் காலம் (5) நாயக்கர் காலம்

19) விஷ்ணுவின் அவதாரங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
(1) வாமனம், கூர்மம், மத்ஸயம், அநந்தசயனர், கிருஷ்ணர்
(2) நாராயணர், கிருஷ்ணர், நரசிங்கர், புத்தர், வியாசர்
(3) மத்ஸயம், வாமனம், கூர்மம், நரசிம்மம், கல்கி
(4) கிருஷ்ணர், விஷ்ணு, இராமர், பாதராயணர், புத்தர்
(5) கல்கி, நாராயணர், வாசுதேவர், இராமர், வைகுந்தப் பெருமாள்

20) முதலாழ்வார்கள் அடங்கும் தொகுதி
(1) பெரியாழ்வார், நம்மாழ்வார், பேயாழ்வார்
(2) நம்மாழ்வார், பேயாழ்வார், பூதந்தாழ்வார்
(3) பொய்கையாழ்வார், பூதந்தாழ்வார், பேயாழ்வார்
(4) பெரியாழ்வார், பொய்கையாழ்வார், பூதந்தாழ்வார்
(5) பெரியாழ்வார், நம்மாழ்வார், பூதந்தாழ்வார்

21) ‘பைங்கட்பார்ப்பான்’, ‘வாலிழைபாகத் தொருவன்’ என சிவனைக் குறிப்பிடும் பெயர்கள் இலக்கியங்களில் இடம்பெற்ற காலப்பகுதி
(1) சங்க காலம் (2) சங்கமருவிய காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழர் காலம் (5) நாயக்கர் காலம்

22) வீர சைவத்திற்குரிய முதன்மையான ஆகமங்களாகக் கொள்ளப்படுபவை
(1) காமிகம், காரணம் (2) வீரம், வாதுளம்
(3) சிக்திஜம், அஜிதம் (4) பாஞ்சராத்திரம், வைகாசனம்
(5) சுப்பிரபோதம், புட்கரம்

23) தமிழகத்தில் விஷ்ணுவின் ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட பொதுப் பெயர்
(1) விண்ணகரங்கள் (2) காமகோட்டங்கள்
(3) திருக்கோயில்கள் (5) திவ்விய தேசங்கள்
(5) சதுர் வேதிமங்கலங்கள்

24) திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி முதலிய பாடல்களைப் பாடிய வைணவ ஆழ்வார்
(1) பொய்கையாழ்வார் (2) பேயாழ்வார் (3) ஆண்டாள்
(4) நம்மாழ்வார் (5) மதுரகவியாழ்வார்

25) தமிழ் ஆகமம் எனச் சிறப்பிக்கப்படும் இலக்கியம்
(1) பெரியபுராணம் (2) திருக்குறள் (3) திருமந்திரம்
(4) சிலப்பதிகாரம் (5) பரிபாடல்

26) ஏரன் நரசிம்மர் கோயில், உதயகிரி ஆகிய குகைக் கோயில்கள் அமைக்கப்பட்ட காலம்
(1) மௌரியர் காலம் (2) குப்தர் காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழர் காலம் (5) நாயக்கர் காலம்

27) தமிழக வரலாற்றில் குடைவரைக் கோயிலை ஆரம்பித்து வைத்த மன்னன்
(1) சம்மவிஷ்ணு (2) நரசிம்மவர்மன் (3) இராஜராஜன்
(4) இராஜேந்திரன் (5) மகேந்திரவர்மன்

28) மௌரியர் ஆட்சியின் போது மகிந்த தேரரினால் பௌத்த இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட போது அனுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன்
(1) விஜபாகு (2) மகாபராக்கிரமபாகு (3) தேவநம்பியதீசன்
(4) நிஸங்கமல்லன் (5) மகிந்தன்

29) இராஜேந்திரன் காலத்தில் புகழ் பெற்ற பண்டித சோழேஸ்வரம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு
(1) மெடிரிகிரியா கல்வெட்டு (2) குருநாகல் கல்வெட்டு
(3) பதவியாக் கல்வெட்டு (4) மிகிந்தலைக் கல்வெட்டு
(5) கோணேசர் கல்வெட்டு

30) வானவன் மாதேவீஸ்வரம் ஆலயத்தை அமைத்த மன்னன்
(1) மகேந்திரவர்மன் (2) இராஜசிம்மன் (3) இராஜராஜன்
(4) இராஜேந்திரன் (5) நரசிம்மவர்மன்

31) மகேந்திர வர்மனின் மதமாற்றத்திற்குக் காரணமாக விளங்கிய சமயகுரவர்
(1) சம்பந்தர் (2) சுந்தரர் (3) அப்பர்
(4) மாணிக்கவாசகர் (5) திருமூலர்

32) குப்தர் காலத்தில் உயர்கல்வி நிலையங்களாக விளங்கியவை
(1) காந்தாரம், சூவிஹார் (2) பிரயாகை, சாகேதம் (3) மகதம், கன்னோசி
(4) பீகார், நாலந்தா (5) வல்லபி, பிரயாகை

33) பிரகத் சங்கிதை என்னும் நூலை இயற்றியவர்
(1) ஆரியப்பட்டர் (2) வராகமிகிரர் (3) புத்தகோஷர்
(4) புத்த தத்தா (5) ஆரியசூரர்

34) பண்டித சோழன் உத்தம சோழன் ஆகிய பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்ட மன்னன்
(1) முதலாம் இராசராசன் (2) முதலாம் இராசேந்திரன்
(3) விசயாலயன் (4) குலோத்துங்கன்
(5) ஆதித்தன்

35) குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள் ஆகியோர் பல சைவப் பிரபந்தங்களை இயற்றிய காலம்
(1) மௌரியர் காலம் (2) குப்தர் காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழர் காலம் (5) நாயக்கர் காலம்

36) சிவப்பிரகாசம் போற்றிப் ப∴றொடை வெண்பா ஆகியவற்றை அருளிய புறச்சந்தான குரவர்
(1) திருவியலூர் உய்யவந்த தேவர் (2) திருக்கடவூர் உய்யவந்த தேவர்
(3) மெய்கண்ட தேவர் (4) அருணந்தி சிவாச்சாரியார்
(5) உமாவதி சிவாச்சாரியார்

37) இந்துசமயக் கருத்துக்களையும், இஸ்லாமியக் கருத்துக்களையும் இணைத்த ஒருவகைச் சமய நெறியிலே நின்ற பக்தி நெழியாளர்
(1) இராமானுஜர் (2) இராமானந்தர் (3) கபீர்தாசர்
(4) துளசிதாசர் (5) ஸ்ரீசைத்தன்னியர்

38) இராஜாராம் மோகன் ராயின் பணிகளிலே தலையாயதாக கருதப்படும் உடன் கட்டையேறும் (சதி) வழக்கினை பென்டிங்பிரபு சட்டமூலம் தடை செய்த ஆண்டு
(1) 1829 (2) 1828 (3) 1818 (4) 1804 (5) 1795

39) "சுத்தி" என்னும் சடங்கின் மூலம் இந்துக்கள் அல்லாதவரையும் இந்துக்களாக்கிவிடும் முயற்சியில் ஈடுபட்டவர்
(1) இராமகிருஷ்ண பரமஹம்சர் (2) சுவாமி விபுலானந்தர்
(3) ராஜாராம் மோகன்ராஜ் (4) தயானந்த சரஸ்வதி
(5) கேசவ் சந்திரசென்

40) "கல்வி என்பது உள்ளத்தில் உறையும் ஞானத்தை வெளிக்கொணர்வதே" என்று உண்மைக் கல்வித் தத்துவத்தினை உணர்த்தி வைத்த பெருமைக்குரியவர்
(1) மகாத்மா காந்தியடிகள் (2) விபுலானந்தடிகள்
(3) சுவாமி விவேகானந்தர் (4) இராமகிருஷ்ண பரமஹம்சர்
(5) ராஜாராம் மோகன்ராஜ்

➢ மேல்வரும் பகுதிகளிலே தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சோடியைத் தெரிவு செய்து விடைத்தாளில் அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>கர்ஷணம் | B<br>அதர்வணம் | C<br>சிவபரத்துவம் | D<br>இராசசிம்மன் | E<br>பிராமணர் குடியிருப்பு |
| F<br>சர்க்கம் | G<br>ஆகமப்பிரியன் | H<br>பிராயச்சித்தம் | I<br>பிரமதேயம் | J<br>ராஜகர்மாணி |

41) ஆகமக் கிரியை மரபுடன் தொடர்புடைய தொகுதி
(1) BJ (2) AH (3) CF (4) DG (5) EI

42) வேதாகமத்துடன் தொடர்புடைய தொகுதி
(1) AH (2) BI (3) CJ (4) EI (5) BJ

43) புராணங்களுடன் தொடர்புடைய தொகுதி
(1) CF (2) BJ (3) DG (4) AH (5) EI

44) பல்லவர் காலத்துடன் தொடர்புடைய தொகுதி
(1) AH (2) BJ (3) CF (4) DG (5) EI

45) சோழர் காலத்துடன் தொடர்புடைய தொகுதி
(1) BJ (2) AH (3) EI (4) DG (5) CF

- 46 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்து அத்தொகுதிக்கான இலக்கத்தைக் குறிப்பிடுக.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>இருக்குவேதம் | F<br>கிரியாபாதம் | K<br>மண்டகப்பட்டு | P<br>தேவதூதன் |
| B<br>காமிகம் | G<br>கிருஷ்ணதேவராயர் | L<br>பிரஜாபதி | Q<br>குமாரதந்திரம் |
| C<br>சமுத்திரகுப்தன் | H<br>மாக்ஸ்முல்லர் | M<br>வைகாசனம் | R<br>சாகுந்தலம் |
| D<br>மண்டலிதர் | I<br>குடைதளிகள் | N<br>காளிதாசர் | S<br>சிவஞானமுனிவர் |
| E<br>மகேந்திரவர்மன் | J<br>அஸ்வமேதயாகம் | O<br>வித்தியாரண்யர் | T<br>தர்மராஜரதம் |

46) வேதங்களுடன் தொடர்புடைய தொகுதி
(1) BFMQ (2) AHLP (3) CIKR (4) DJNT (5) EGKT

47) ஆகமங்களோடு தொடர்பான தொகுதி
(1) AHLP (2) DJNT (3) EGKT (4) BFMQ (5) CIKR

48) குப்தர் காலத்தோடு தொடர்புடைய தொகுதி
(1) CJNR (2) EFMQ (3) AHLP (4) DGKS (5) EIOT

49) நாயக்கர் காலத்தோடு தொடர்புடைய தொகுதி
(1) CJNR (2) EGKT (3) BFMQ (4) AHLP (5) AHLP

50) பல்லவர் காலத்தோடு தொடர்பான தொகுதி
(1) BFMG (2) DGOS (3) EIKT (4) CJNR (5) AHLP

($50 \times 2 = 100$ புள்ளிகள்)